

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 27-07-2025


# தலைநிமிர்த்திய முதலமைச்சர்!

தமிழ்நாட்டை அனைத்து வகைகளிலும் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைநிமிர்த்தி இருக்கிறார் என்பதற்கு இந்த வாரத்தில் மட்டுமே மூன்று இடங்களில் இருந்து பாராட்டுகள் வந்துள்ளன.

1. இந்திய நாட்டில் தனிநபர் வருமானம் குறித்த புள்ளிவிவரத்தை ஒன்றிய நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி நாடாளுமன்றத்தில் வெளியிட்டு இருக்கிறார். அதில் இந்திய நாட்டில் தனிநபர் வருமானம் அதிகம் உள்ள மாநிலமாக முதலிடத்தில் கர்நாடக மாநிலம் உள்ளது. அடுத்த இடத்தில் தமிழ்நாடு இருப்பதாக அறிவித்துள்ளார். அந்த வகையில் இந்தியாவில் தனிநபர் வருமானம் அதிகம் உள்ள இரண்டாவது மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. கர்நாடக மாநிலத்தின் தனிநபர் வருமானம் 2,04,605 ரூபாய் ஆகும். தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 1,93,309 ரூபாய் ஆகும். தமிழ்நாட்டைத் தொடர்ந்து அரியானா, தெலங்கானா, மராட்டியம், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இருக்கின்றன. இந்திய சராசரியாக 1,14,710 ரூபாய் இருக்கிறது. இதன்படி பார்த்தால் இந்திய சராசரியை விட தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் அதிகம் ஆகும்.

2. நாட்டிலேயே அதிகத் தொழிற்சாலைகள் கொண்ட மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது. இதனை இந்திய ரிசர்வ் வங்கியின் ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. இந்தியாவில் 2 லட்சத்து 53 ஆயிரத்து 334 தொழிற்சாலைகள் இருக்கின்றன. இதில் 39 ஆயிரத்து 666 தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அதிகமான தொழிற்சாலைகள் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது என்று ரிசர்வ் வங்கி சொல்லி இருக்கிறது. அதிகத் தொழிற்சாலைகள் இருப்பதன் மூலமாக அதிக வேலை வாய்ப்புகள் வழங்கும் மாநிலங்களின் பட்டியலிலும் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளதாக ரிசர்வ் வங்கி சொல்லி இருக்கிறது.

3. தமிழ்நாட்டில் மாணவர் சேர்க்கை அதிகரித்து இருப்பதாக ஒன்றிய கல்வித் துறை இணை அமைச்சர் ஜெயந்த் சவுத்ரி சொல்லி இருக்கிறார். விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போது இதனைச் சொல்லி இருக்கிறார் அமைச்சர். இந்தியா முழுக்க மாணவர் சேர்க்கை விகிதம் குறித்து ரவிக்குமார் எம்.பி. கேள்வி எழுப்பி இருக்கிறார். இதற்கு அமைச்சர் அளித்த பதில் மூலமாக, தேசியக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்திய பிறகு இந்தியாவில் பள்ளி இடைநிற்றல் விகிதம் 5.23 விழுக்காடு அதிகம் ஆகி இருப்பதாக ஒன்றிய அமைச்சரே ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால் தேசியக் கல்விக் கொள்கையை ஏற்காத தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் மாணவர் சேர்க்கை அதிகம் ஆகி இருக்கிறது என்பதையும் அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

- இந்த மூன்று பாராட்டுகளும் ஒரே வாரத்தில் கிடைத்திருக்கின்றன.

தனிநபர் வருமானம் என்பது ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி நிலைகளின் அளவுகோல் ஆகும். துறைசார்ந்த கட்டமைப்புகள், பொது மக்களின் வாழ்க்கைத் தரம், சமூகச் சூழ்நிலைகள், மக்களுக்கு அரசு வழங்கும் உரிமைகள் மற்றும் சலுகைகள் ஆகியவை சார்ந்தது ஆகும். அந்த வகையில் தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் உயர அரசின் செயல்பாடுகளே முக்கியமான காரணிகளாக அமைந்துள்ளன. தொழில் துறையில் ஏற்பட்டு வரும் புரட்சிகள், உருவாக்கப்படும் புதிய வேலை வாய்ப்புகள், தமிழ்நாட்டை நோக்கி அதிகமான நிறுவனங்கள் வருவது, அனைத்துத் துறைகளுக்கும் தரப்படும் முக்கியத்துவம், அனைத்து மாவட்டங்களுக்கும் நகரம், கிராமம் வேறுபாடு இல்லாமல் பரவலாக்கப்படும் தொழில் வளர்ச்சி ஆகியவை இதற்கு அடித்தளம் அமைக்கின்றன. பொதுமக்களுக்கு குறிப்பாக பெண்கள், இளைஞர்களுக்குச் செய்து தரப்படும் உதவிகள் இதில் முக்கியக் காரணிகளாக அமைகின்றன.

**தமிழ்நாட்டில் மாணவர் சேர்க்கை அதிகமானதற்குக் காரணம் கண்டு பிடிப்பது சிரமமானது அல்ல. ‘திராவிட மாடல்’ ஆட்சியானது உருவான பிறகு கல்விக்குத்தான் அதிகப்படியான முக்கியத்துவம் தரப்படுகிறது. ‘எந்தக் கவலையும் தேவையில்லை, உங்களுக்கு நான் இருக்கிறேன், அனைத்து ஏற்பாடுகளையும் நான் செய்து தருகிறேன், நீங்கள் படியுங்கள், கல்விதான் யாராலும் திருட முடியாத சொத்து’ என்று ஒவ்வொரு மேடைகளிலும் மாணவர்களைப் பார்த்துச் சொல்லி வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இந்த நான்காண்டு காலத்தில் பள்ளிக் கல்வித்துறை துள்ளி எழுந்துள்ளது.**

18 லட்சம் பிள்ளைகளுக்கு தினந்தோறும் காலை உணவு வழங்குவது மாணவ, மாணவியரின் கல்வி அறிவை மட்டுமல்ல; உடல் வளத்தையும் உருவாக்கி வருகிறது. 50க்கும் மேற்பட்ட திட்டங்கள் பள்ளிக் கல்வித் துறையால் உருவாக்கப் பட்டுள்ளன. இவை அனைத்தும் மாணவ, மாணவியரின் அறிவுச் செழுமையை வளப்படுத்தி வருகிறது. தேர்வில் தேர்ச்சி பெறுபவர்களாக மட்டுமல்லாமல், உயர்வில் தேர்ச்சி பெறுபவர்களாக மாணவர்களை உருவாக்க பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்கள். மாணவ, மாணவியர் பல்வேறு நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். ஆசிரியர்களும் வலம் வருகிறார்கள். மாணவர்களின் படைப்பாற்றல் ஊக்குவிக்கப்படுகிறது.

நேற்றைய தினம் 2,457 இடை நிலை ஆசிரியர்களுக்கான பணி ஆணைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். 80 ஆயிரம் இடை நிலை ஆசிரியர்களுக்கு கைக்கணினிகள் தரப்பட்டுள்ளன. திறன்மிகு வகுப்பறைகள், உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் உருவாக்கித் தரப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சேர்ந்து கொடுத்துள்ள பலன்தான் மாணவர் சேர்க்கை அதிகரித்து இருப்பது ஆகும்.

**‘அனைத்தையும் உள்ளடக்கிய - அனைவரையும் உள்ளடக்கிய திராவிட மாடல் அரசு இது’ என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதனுடைய பலன்கள்தான் இன்று கிடைத்த பாராட்டுகளாக நம் கண் முன்னால் விரிகிறது.**

**தனக்கென ஒரு இலக்கை வைத்து, அந்த இலக்கை நோக்கிய பயணத்தில் தொய்வில்லாமல் பயணித்து, அந்தப் பயணத்தை விரைந்து நடத்தி, வெற்றியையும் உடனடியாகக் காட்டிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரைப் பாராட்டுவோம், வாழ்த்துவோம். அவரது நல்லாட்சி, எந்நாளும் தொடர உழைப்போம்.**

## சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பது

# சீர்திருத்தம் அல்ல; தேர்தல் முடிவுகளைத் திட்டமிட்டு வடிவமைக்கும் தில்லு முல்லு நடவடிக்கை!

## மக்களாட்சி மக்களுக்கே உரியது – அதனை எவரும் களவாட அனுமதிக்க மாட்டோம் என்று கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஜூலை 27-**

**சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (SIR) என்பது சத்தமே இல்லாமல் பின்தங்கிய மற்றும் தங்களுக்கு எதிரான பிரிவினரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கி, தேர்தலில் பா.ஜ.க.வுக்கு சாதகமான சூழலை உருவாக்கும் செயலாகும். இது சீர்திருத்தம் அல்ல; தேர்தல் முடிவுகளைத் திட்டமிட்டபடி வடிவமைக்கும் தில்லு முல்லு நடவடிக்கை என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**




இதுகுறித்து முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு :-

சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (SIR) என்பது சத்தமே இல்லாமல் பின்தங்கிய மற்றும் தங்களுக்கு எதிரான பிரிவினரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கி, தேர்தலில் பா.ஜ.க.வுக்கு சாதகமான சூழலை உருவாக்கும் செயலாகும். இது சீர்திருத்தம் அல்ல; தேர்தல் முடிவுகளைத் திட்டமிட்டபடி வடிவமைக்கும் தில்லு முல்லு நடவடிக்கை!

பீகார் மாநிலத்தில் நடந்ததே அனைத்தையும் வெட்டவெளிச்சமாக்கிவிட்டது. முன்பு தங்களுக்கு வாக்களித்த அதே மக்களே கூட இம்முறை நம்மை வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள் என்பதை டெல்லி அணி நன்கு உணர்ந்துள்ளது. அதனால்தான், அவர்கள் வாக்களிக்கவே கூடாது எனத் தடுக்கப் பார்க்கிறது.

எங்களைத் தோற்கடிக்க முடியாது என்ற சூழல் எழுந்தால் எங்களை வாக்காளர் பட்டியலில் இருந்தே நீக்கப் பார்க்கிறீர்கள். நெருப்புடன் விளையாடாதீர்கள். மக்களாட்சிக்கு எந்த வடிவில் அச்சுறுத்தல் நேர்ந்தாலும் அதனை உறுதியாக நின்று எதிர்ப்போம்.

முழு ஆற்றலுடன் தமிழ்நாடு தனது குரலை உரக்க எழுப்பும். இந்த அநீதிக்கு எதிராக ஜனநாயகரீதியான அத்தனை ஆயுதங்களையும் நாங்கள் அறவழியில் பயன்படுத்துவோம்.

அரசியலமைப்புச் சட்டத்தின்பால் நம்பிக்கை கொண்டுள்ள குடிமக்கள் அனைவருக்கும் சொல்லிக்கொள்வது என்னவென்றால்: S.I.R. என்பது ஒரு மாநிலத்தோடு தொடர்புடையது மட்டுமல்ல, நமது குடியரசின் அடித்தளம் தொடர்பானது. மக்களாட்சி மக்களுக்கே உரியது. அதனை எவரும் களவாட அனுமதிக்க மாட்டோம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## புதிய உறுப்பினர்களுக்கு வாழ்த்து! மாநிலங்களவையில் தி.மு.கழகத்தின் வாதங்களை

# தமிழ்நாட்டின் உரிமைக் குரலை ஓங்கி ஒலிக்கும் நமது எம்.பி.க்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூலை 27-**

“I belong to the Dravidian stock” **எனப் பேரறிஞர் அண்ணா முழங்கிய நாடாளுமன்ற மாநிலங்களவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாதங்களை தமிழ்நாட்டின் உரிமைகளை ஓங்கி ஒலிக்கும் நமது எம்.பி.க்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

“I belong to the Dravidian stock” எனப் பேரறிஞர் அண்ணா முழங்கிய நாடாளுமன்ற மாநிலங்களவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாதங்களை தமிழ்நாட்டின் உரிமைக் குரலை ஓங்கி ஒலிக்கும் நமது எம்.பி.,க்கள்!

திராவிடத் தூணாக முழங்கி விடைபெற்ற அண்ணன் வைகோ அவர்களது உரையில் உள்ளம் உருகி நெகிழ்ந்தேன்!

சண்முகம், எம்.எம்.அப்துல்லா ஆகியோரது பணிகளுக்ுப் பாராட்டும் எம்.பி.,யாகத் தொடரும் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், புதிய குரலாக ஒலிக்கவுள்ள அருமை நண்பர்கமல் ஹாசன், எஸ்.ஆர்.சிவலிங்கம், கவிஞர் சல்மா ஆகியோருக்கும் வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## மத்திய பல்கலையில் காலிப் பணியிடங்கள் குறித்து ஒன்றிய அரசு அறிக்கை!

# மனுநீதிக் கொள்கையைப் பின்பற்றுகிறது ஒன்றிய பா.ஜ.க.!

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜூலை 27 -

நாடாளுமன்றத்தில், காலிப் பணியிடங்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையே, ஒன்றிய பா.ஜ.க. அரசு, மனுநீதி கொள்கையை பின்பற்றுவதற்கான ஆதாரம் என, மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

மத்திய பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் மற்றும் துணைப் பேராசிரியர் பணிகளுக்காக பழங்குடியினத்தவர் 83 சதவிகிதமும், ஒபிசி பிரிவில் 80 சதவிகிதமும், பட்டியலினத்தவர் பிரிவில் 64 சதவிகிதமும் காலியாக உள்ளதாக நாடாளுமன்றத்தில் எழுப்பப் பட்ட கேள்விக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் அளித்துள்ளது.

இது குறித்து மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூகவலை தளப் பதிவில் தெரிவித்துள்ளதாவது:-

ஒன்றிய பா.ஜ.க. அரசு மனுநீதி கொள்கையை பின்பற்றுவதற்கான ஆதாரம் இந்த அறிக்கைதான் என பதிவிட்டுள்ளார்.

இந்த அறிக்கை மூலம் எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி. பிரிவினர் புறக்கணிக்கப்படுவது அம்பலம் ஆகியுள்ளதாகவும் ராகுல்காந்தி குறிப்பிட்டுள்ளார்.

இதனால், மத்திய பல்கலைக் கழங்களில் நடத்தப்படும் கலந்துரையாடல்கள், ஆராய்ச்சிகள்



உள்ளிட்டவற்றில் எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி. பிரிவினர் பங்கேற்க முடியாத சூழல் உள்ளதாகவும் ராகுல்காந்தி கூறியுள்ளார்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு மனுநீதி சிந்தனையுடன் இருப்பதால், ஆயிரக்கணக்கான எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி. பிரிவினர், நிராகரிக்கப்படு வதாகவும் ராகுல்காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த நடைமுறையை ஏற்று கொள்ளப் போவதில்லை என்றும், உடனடியாக மத்திய பல்கலைக் கழகங்களில் காலியாக உள்ள பேராசிரியர், துணை பேராசிரியர் பணியிடங்களை நிரப்பிட வேண்டும் என்றும், எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி. பிரிவினர் தங்களது உரிமைகளை பெற்றிடவேண்டும் என்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி வலியுறுத்தியுள்ளார்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (25.07.2025) திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பீமநகரில் நடைபெற்று வரும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்களை பதிவேற்றம் செய்வதையும் முகாமின் செயல்பாடுகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களுடன் கலந்துரையாடி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், நகரப் பொறியாளர் சிவபாதம், உதவி ஆணையர் ச.நா.சண்முகம், திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டாட்சியர் எஸ்.பிரகாஷ், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.